மகாராஷ்டிரம்: லட்சத்துக்கும் மேற்பட்ட வங்கதேசத்தினருக்கு போலி பிறப்புச் சான்றிதழ்

கடும் நடவடிக்கை எடுக்கப்படுமென எச்சரிக்கை

மும்பை/ நாசிக், ஜன. 28: மகாராஷ்டிரத்தில் சட்டவிரோதமாக ஊடுருவிய வங்கதேசத்தவர்களும், மியான்மரில் இருந்து புகுந்த ரோஹிங்கயாக்களும் 1 லட்சத்துக்கு மேற்பட்ட பிறப்புச் சான்றிதழ்களை போலியான ஆவணங்களைப் பயன்படுத்தி பெற்றுள்ளதாக எழுந்த குற்றச்சாட்டு பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்த விவகாரத்தில் மாநில அரசு கடும் நடவடிக்கை எடுக்கும் என்று மாநில உள்துறை இணையமைச்சர் யோகேஷ் கதம் தெரிவித்துள்ளார்.

வங்கதேசத்தவரும், ரோஹிங்கயாக்களும் இந்தியாவுக்குள் சட்டவிரோதமாக ஊடுருவுவது பல ஆண்டுகளாக நடந்துவருகிறது. அண்மையில் வங்கதேசத்தில் வன்முறைப் போராட்டத்தின் மூலம் ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. அங்கு ஹிந்துக்களும் கோயில்களும் குறிவைத்து தாக்கப்பட்டன. அங்குள்ள மத அடிப்படைவாத அமைப்புகள் இந்தியாவுக்கு எதிராகவும் தீவிர பிரசாரங்களை முன்னெடுத்து வருகின்றன. இந்தியாவுக்குள் சட்டவிரோதமாக ஊடுருவிய வங்கதேசத்தவர், ரோஹிங்கயாக்கள் மூலம் அசம்பாவித சம்பவங்களை அந்த அடிப்படைவாத அமைப்புகள் நிகழ்த்திவிடக் கூடாது என்பதால் நாடு முழுவதும் தீவிர முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

வங்கதேசத்தையொட்டிய மாநிலங்கள் உள்பட நாட்டின் பல்வேறு பகுதிகளில் சட்டவிரோதமாக ஊடுருவும் வங்கதேசத்தவர்களுக்கு எதிராக தீவிரமாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. தொழில், வேலைவாய்ப்புகள் அதிகமுள்ள மாநிலங்களிலும் வங்கதேசத்தவரும், ரோஹிங்கயாக்களும் அதிகம் ஊடுருவியுள்ளனர். அவர்களைக் கண்டுபிடித்து கைது செய்யும் பணி நடைபெற்று வருகிறது.

இந்நிலையில், மகாராஷ்டிரத்தில் இந்த விவகாரம் பெரும் பிரச்னையாக உருவெடுத்துள்ளது.

இது தொடர்பாக பாஜக முன்னாள் எம்.பி. கிரீட் சோமைய்யா கூறுகையில், 'கடந்த 6 மாதங்களில் மட்டும் 2.14 லட்சம் வங்கதேசத்தவரும், ரோஹிங்கயாக்களும் போலி ஆவணங்கள் மூலம் பிறப்புச் சான்றிதழ் பெற விண்ணப்பித்துள்ளனர். இதில் 1.13 லட்சத்துக்கும் மேற்பட்டோருக்கு சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது. அவர்கள் ரேஷன் கார்டு, பள்ளியில் படித்த சான்றிதழ் எனப் பெற்று படிப்படியாக இந்திய குடிமக்கள் என்ற போர்வையில் வசிக்கத் தொடங்கியுள்ளனர். நாட்டு மக்களுக்கு அரசு அளிக்கும் உரிமைகளையும், பயன்களையும் பெற்று வருகின்றனர். சில குறிப்பிட்ட பகுதிகளில் வழக்கத்துக்கு மாறாக பிறப்புச் சான்றிதழ், ஆதார் அட்டை, வாக்காளர் அட்டை, ரேஷன் கார்டுகள் பெற அதிக விண்ணப்பங்கள் வருகின்றன.

உள்துறை அமைச்சகத்துக்கு பொறுப்பு வகிக்கும் முதல்வர் தேவேந்திர ஃபட்னவீஸ் இந்த விஷயத்தில் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும். மோசடிக்குத் துணை போகும் அரசுப் பணியாளர்கள் மீது கடும் நடவடிக்கை தேவை என்றார்.

இதனிடையே நாசிக் மாவட்டத்தில் இந்த குற்றச்சாட்டு தொடர்பாக இரு வருவாய் துறை அதிகாரிகள் பணியிடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

அமைச்சர் எச்சரிக்கை: இது தொடர்பாக மாநில உள்துறை இணையமைச்சர் யோகேஷ் கதம் கூறுகையில், 'சட்டவிரோதமாக நமது நாட்டுக்குள் ஊடுருவியவர்கள் மீது எவ்வித பாரபட்சமும் இன்றி கடும் நடவடிக்கை எடுக்கப்படும். இதுபோன்ற ஊடுருவல்காரர்களை அரசு எவ்விதத்திலும் சகித்துக் கொள்ளாது' என்றார்.

வர்த்தக நுழைவு வாயிலாகத் திகழும் மத்திய கிழக்கு நாடுகள்

எஸ்.ஜெய்சங்கர்

அபுதாபி, ஜன. 28: 'உலகின் வலுவான வர்த்தகம் மற்றும் போக்குவரத்து இணைப்புக்கான நுழைவு வாயிலாக மத்திய கிழக்கு நாடுகள் திகழ்கின்றன. இந்த நாடுகளுடன் இந்தியா உறவை மேலும் வலுப்படுத்துவது அவசியம்' என்று வெளியுறவு அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் கூறினார்.

ஐக்கிய அரபு அமீரக தலைநகர் அபுதாபியில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற 'ரைசினா மத்திய கிழக்கு' என்று மத்திய கிழக்கு நாடுகளுடனான புவிசார் அரசியல் மற்றும் புவிசார் பாதுகாப்பு மாநாடு தொடக்க நிகழ்ச்சியில் பங்கேற்ற எஸ்.ஜெய்சங்கர் பேசியதாவது:

இந்தியாவின் பொருளாதாரம் மற்றும் பாதுகாப்பு நலன்களில் முக்கியத்துவம்வாய்ந்த கூட்டாளிகளாகத் திகழும் மத்திய கிழக்கு நாடுகள், உலகின் வலுவான வர்த்தகம் மற்றும் போக்குவரத்து இணைப்புக்கான நுழைவு வாயிலாகவும் திகழ்கின்றன.

வளைகுடா நாடுகளுடன் மட்டும் ரூ. 13 லட்சம் கோடி முதல் ரூ. 15 லட்சம் கோடி வரையிலான மதிப்பில் வர்த்தக உறவை இந்தியா கொண்டுள்ளது. அந்த வகையில், வளைகுடா நாடுகளுடனான இந்தியாவின் உறவு மிக முக்கியத்துவம் வாய்ந்தது. இங்கு 90 லட்சம் இந்தியர்கள் வாழ்ந்து வருகின்றனர். மத்திய கிழக்கு, வடஆப்பிரிக்க நாடுகள் மற்றும் மத்தியதரைக் கடல் பிராந்தியத்துக்கும் வர்த்தக நுழைவு வாயிலாக வளைகுடா நாடுகள் திகழ்கின்றன.

மத்தியதரைக் கடல் பகுதி நாடுகளுடன் மட்டும் ரூ. 7 லட்சம் கோடி மதிப்பில் வர்த்தக உறவை இந்தியா கொண்டுள்ளது. 5 லட்சத்துக்கும் அதிகமான இந்தியர்கள் இங்கு வசிக்கின்றனர். இந்தப் பிராந்தியத்தில் விமானங்கள், துறைமுகங்கள், ரயில்வே, பசுமை ஹைட்ரஜன் உற்பத்தி, உருக்கு மற்றும் கடலுக்கடியில் கேபிள்கள் பதிப்பு உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை இந்தியா மேற்கொண்டு வருகிறது.

இந்த நாடுகளுடன் இத்தகைய வலுவான உறவை இந்தியா கொண்டுள்ளபோதும், கடல்சார் பாதுகாப்பு மற்றும் அச்சுறுத்தல்கள் தீர்க்கப்பட வேண்டிய உலகளாவிய பிரச்னையாக உள்ளது. அந்த வகையில், மத்திய கிழக்கு நாடுகளுடனான உறவை இந்திய மேலும் வலுப்படுத்த வேண்டியது அவசியம் என்றார்.

முன்னதாக, அபுதாபி இளவரசர், துணைப் பிரதமர், வெளியுறவு அமைச்சர் உள்ளிட்டோரை ஜெய்சங்கர் சந்தித்துப் பேசினார்.

மேலும், ஐக்கிய அரபு அமீரக அதிபருக்கான வெளியுறவு ஆலோசகர் அன்வர் கர்கேஷுடன் ஜெய்சங்கர் ஆலோசனை மேற்கொண்டார். அப்போது, இரு நாடுகளிடையேயான சிறப்பு ஒத்துழைப்பு மேலும் வலுப்படுத்துவது குறித்து ஆலோசிக்கப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

அபுதாபி இளவரசர் ஷேக் காலித் ஸையத் அல் நஹ்யானை செவ்வாய்க்கிழமை சந்தித்துப் பேசிய எஸ்.ஜெய்சங்கர்.

இந்தியா–அமெரிக்கா பிணைப்பே என்னை உருவாக்கியது

சத்யா நாதெள்ளா

நியூயார்க்/ சியாட்டில் ஜன. 28: இந்தியா–அமெரிக்கா இடையிலான நல்லவொரு பிணைப்பே என்னை உருவாக்கியது என்று மைக்ரோசாஃப்ட் தலைமைச் செயல் அதிகாரி (சிஇஓ) சத்யா நாதெள்ளா தெரிவித்தார்.

சியாட்டில் நகரில் ஞாயிற்றுக்கிழமை இந்திய குடியரசு தினம் கொண்டாடப்பட்டது. இதில் அமெரிக்காவில் முக்கிய அரசுப் பதவிகள், பிரபல நிறுவனங்களில் பதவி வகிக்கும் இந்திய வம்சாவளியினர், இந்தியா வம்சாவளி எம்.பி.க்கள் உள்ளிட்ட 500–க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர். இந்திய சமூகத்தினர் அமெரிக்காவின் வளர்ச்சிக்கு ஆற்றிய பணிகள் குறித்தும், தேசத்துக்கான அவர்களின் பங்களிப்பு குறித்தும் நிகழ்ச்சியில் பங்கேற்றவர்கள் பேசினர். சியாட்டில் நகரில் உள்ள இந்திய துணைத் தூதரகம் சார்பில் நடத்தப்பட்ட இந்த நிகழ்ச்சியில் அமெரிக்க எம்.பி.க்கள், மாகாண ஆளுநர்கள், அரசியல் தலைவர்கள் சிலரும் கலந்து கொண்டனர். இதில் சத்யா நாதெள்ளா பேசியதாவது:

இரு நாடுகளுக்கும் (இந்தியா–அமெரிக்கா) இடையில் நிலவி வரும் நல்லதொரு பிணைப்பே என்னை உருவாக்கியது. இரு நாடுகளின் தலைமையும் நவீன தொழில்நுட்பத்தை மேம்படுத்துவது, கல்வித் தரம், மருத்துவம், பொதுமக்களுக்கான சேவைகளை சிறப்பாக வழங்குவது உள்ளிட்டவற்றில் கூடுதல் கவனம் செலுத்தி வருகின்றன என்றார்.

வாஷிங்டன் மாகாணத்தின் ஆளுநர் பெர்குஸன், 'இந்திய சமூகத்தினர் அமெரிக்க மேம்பாட்டுக்குமட்டுமல்லாதுஒட்டுமொத்த உலகமேம்பாட்டுக்கும்பணியாற்றி வருகின்றனர்' என்றார்.

கன்னட ஆர்வலர்களுக்கு எதிரான அனைத்து வழக்குகளும் திரும்பப் பெறப்படும்: முதல்வர் சித்தராமையா

பெங்களூரு, ஜன. 28: கன்னட ஆர்வலர்களுக்கு எதிராக பதியப்பட்ட அனைத்து வழக்குகளும் திரும்பப் பெறப்படும் என்று முதல்வர் சித்தராமையா தெரிவித்தார்.

பெங்களூரு, விதானசௌதா வளாகத்தில் கர்நாடக அரசு சார்பில் 25 அடி உயரத்தில் அமைக்கப்பட்டுள்ள கன்னடத்தாய் புவனேஸ்வரியின் சிலை திறப்பு விழா செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. விழாவில் முதல்வர் சித்தராமையா பங்கேற்று சிலையைத் திறந்துவைத்துப் பேசியதாவது:

கன்னட மொழி பேசும் நமது மாநிலத்துக்கு கர்நாடகம் என்று பெயர் சூட்டப்பட்டதன் பொன்விழாவை முன்னிட்டு ஆண்டு முழுவதும் பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அதன்படி, பெங்களூரு, விதானசௌதா வளாகத்தில் கன்னடத் தாய் புவனேஸ்வரியின் சிலையை நிறுவ முடிவு செய்யப்பட்டிருந்தது.

அதன்படி, 25 அடி உயரத்தில் வெண்கலத்தில் செய்யப்பட்ட கன்னடத் தாய் சிலை திறந்து வைக்கப்பட்டுள்ளது. 16 அடி உயரத்தில் அமைந்துள்ள பீடத்தின் மீது 31.5 டன் எடைகொண்ட சிலை நிறுவப்பட்டுள்ளது. இதற்கு ரூ. 21.24 கோடி செலவிடப்பட்டுள்ளது. எனது தலைமையிலான அரசு என்றைக்கும் கன்னடர்களுக்கான அரசாக இருக்கும். கன்னட மொழி, நிலம், நீர் விவகாரத்தில் சமரசம் என்ற பேச்சுக்கே இடமில்லை.

அனைத்து மொழிகளையும் நேசிக்க வேண்டும். அனைத்து மொழியினரையும் சகோதரர்களாக கருத வேண்டும். ஆனால், கர்நாடகத்தில் வாழக் கூடிய பிறமொழியினரிடம் கன்னட மொழியில் பேசும் வழக்கத்தை கன்னடர்கள் பின்பற்ற வேண்டும். பிற மொழிகளில் தவறு தலாகப் பேசுவதற்கு பதிலாக நமது மொழியை சரியாகப் பேசலாம் அல்லவா?

கர்நாடகத்தில் அனைவரும் கன்னடத்தில் பேச வேண்டும். கன்னட மொழி, கலை, கலாசாரத்தின் மீது மதிப்பு, மரியாதையை வளர்த்துக் கொள்ளுமாறு அனைத்து மக்களையும் அறிவுறுத்த வேண்டும். கன்னடத்தில் படிக்க வேண்டும்; கன்னடத்தில் எழுத வேண்டும்.

2023–ஆம் ஆண்டு பெயர்ப்பலகைகளில் கன்னட மொழி இடம் பெறவில்லை என்று அந்தக் கடைகளின் பெயர்ப் பலகைகளை ஒரு சில கன்னடஅமைப்பினர் தாக்கினர். பெயர்ப் பலகையில் கன்னட மொழியை 60 சதவீத அளவு எழுத வேண்டும் என்ற அரசு விதியை கடைப்பிடிக்க வலியுறுத்தி அப்போது கன்னட அமைப்பினர் போராட்டத்தில் ஈடுபட்டனர். அவர்கள் மீது அரசு வழக்குப் பதிவு செய்தது. இந்நிலையில் கன்னட ஆர்வலர்கள், அமைப்பினர் மீது பதிவு செய்யப்பட்டுள்ள அனைத்து வழக்குகளையும் திரும்பப் பெற அரசு தீர்மானித்துள்ளது என்றார்.

விழாவில் துணை முதல்வர் டி.கே. சிவகுமார், கன்னட வளர்ச்சி மற்றும் கலாசாரத் துறை அமைச்சர் சிவராஜ் தங்கடகி, பேரவைத் தலைவர் யு.டி.காதர் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

நிதீஷ் கட்சி முன்னாள் எம்.பி. அன்சாரி காங்கிரஸ் ஐக்கியம்

புது தில்லி, ஜன. 28: பிகார் முதல்வர் நிதீஷ் குமாரின் ஐக்கிய ஜனதா தளம் முன்னாள் மாநிலங்களவை எம்.பி. அலி அன்வர் அன்சாரி, தசரத் மாஞ்ஜியின் மகன் பகீரத் மாஞ்ஜி உள்ளிட்ட பலர் காங்கிரஸ் கட்சியில் செவ்வாய்க்கிழமை இணைந்தனர்.

தில்லியில் உள்ள காங்கிரஸ் தலைமையகத்தில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் அக்கட்சியின் ஊடகப் பிரிவு தலைவர் பவன் கேரா, பிகார் மாநில காங்கிரஸ் தலைவர் அகிலேஷ் பிரசாத் சிங் முன்னிலையில் காங்கிரஸ் கட்சியில் இணைந்தனர்.

இது தொடர்பாக அலி அன்வர் அன்சாரி கூறுகையில், 'பிகாரில் ஐக்கிய ஜனதா தளம்–பாஜக கூட்டணி அரசுக்கு ராகுல் காந்தியின் கொள்கைகள் கலக்கத்தை ஏற்படுத்தியுள்ளன. தலித், மலைவாழ் மக்கள், மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள், சிறுபான்மையினர் எப்போதும் ராகுல் பக்கம் உள்ளனர். அவரால் ஈர்க்கப்பட்டு காங்கிரஸில் இணைந்தேன்' என்றார்.

ஐக்கிய ஜனதா தளம் மூத்த தலைவரான அலி அன்வர் அன்சாரி 2006 முதல் 2017 வரை அக்கட்சி சார்பில் மாநிலங்களவை எம்.பி.யாக இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

பிகாரைச் சேர்ந்த ஆம் ஆத்மி முன்னாள் தலைவர் நிதீஷ் ஆனந்த், பாஜக முக்கிய நிர்வாகி நிகத் அப்பாஸ், பத்திரிகையாளரும் எழுத்தாளருமான ஃபிராங்க் ஹுசூர் உள்ளிட்டோரும் காங்கிரஸ் கட்சியில் இணைந்தனர்.

பொது அறிவிப்பு

ICICI Bank

கிளை அலுவலகம்: ICICI வங்கி லிட்., 3ஆவது தளம், மனை எண்-23, ஷாஸ் டவர், புதிய ரோட்டக் சாலை, கரோல் பாக், டெல்லி-110005.

கீழ்க்காணும் கடன்தாரர்கள் ICICI வங்கியிடமிருந்து தாங்கள் பெற்ற கடன் வசதிகளுக்கான அசலையும் வட்டியையும் திருப்பி செலுத்தத் தவறியுள்ளதால் அந்தக் கடன்கள் செயல்படாச் சொத்தாக (NPA) வகைப்படுத்தப்பட்டுள்ளன.

இதற்கான, கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002, பிரிவு 13(2)-இன் கீழான அறிவிப்பு கடைசியாகத் தெரிந்த அவர்களின் முகவரிகளுக்கு அனுப்பப்பட்டது. ஆனால் அது சார்பு செய்யப்படாததால் இப்பகுதி பொது அறிவிப்பு மூலமாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வ. எண்.	கடன்தாரர் / கூட்டுக் கடன்தாரர் / ஜாமீன்தாரர் பெயர் (கடன் கணக்கு எண்) மற்றும் முகவரி	கடனீட்டுச் சொத்தின் / நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டிய விவரம்	அறிவிப்பு அனுப்பப்பட்ட நாள் / அறிவிப்பு நாள்படி நிலுவைத் தொகை	செயல்படாச் சொத்தாக (NPA) அறிவிக்கப்பட்ட நாள்
1.	லலிதா விக்னேஷ், விதி குஞ்சாணி என்கிற விதி விக்னேஷ், வீட்டு எண் 2354, முல்லக் ஸ்பர்ஸ், சொசைட்டி, பிரிவு-48 C, சண்டிகர் - 160047. கணக்கு எண்: TBCHD00006751995	அடுக்குமாடிக் குடியிருப்பு எண் H406, நான்காவது தளம், டவர்-H, ஹாப்ஸெட் Moh.1. அமைவிடம் - Pr-7, விமானநிலைய அஞ்சல் சாலை, ஏரோசிட்டி அருகில், சத் கிராமம், ஜிர்க்புர் மாவட்டம், S.A.S. நகர், மொகாலி, பஞ்சாப்.	06.01.2025 ரூ. 43,04,511.9/-	08.11.2024
2.	விதி குஞ்சாணி என்கிற விதி விக்னேஷ், லலிதா விக்னேஷ், வீட்டு எண் 2354, முல்லக் ஸ்பர்ஸ், சொசைட்டி, பிரிவு-48 C, சண்டிகர் - 160047. கணக்கு எண்: LBCHD00002926351	அடுக்க எண் 28, ஏழாவது தளம், டவர்-C1. அமைவிடம் - சண்டிஉட்சன் ஒலேன்சியா, பிரிவு 110, S.A.S. நகர், மொகாலி, பஞ்சாப் - 140307.	10.01.2025 ரூ. 25,56,178.69/-	08.11.2024
3.	விதி குஞ்சாணி என்கிற விதி விக்னேஷ், லலிதா விக்னேஷ், வீட்டு எண் 2354, முல்லக் ஸ்பர்ஸ், சொசைட்டி, பிரிவு-48 C, சண்டிகர் - 160047. கணக்கு எண்: LBCHD00002935899	அடுக்க எண் 28, ஏழாவது தளம், டவர்-C1. அமைவிடம் - சண்டிஉட்சன் ஒலேன்சியா, பிரிவு 110, S.A.S. நகர், மொகாலி, பஞ்சாப் - 140307.	10.01.2025 ரூ. 1,00,290.91/-	08.11.2024

மாற்று வழிச் சேவை அறிவிப்புக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேற்கூறிய கடன்தாரர்/கள் மற்றும்/அல்லது அவர்தம் ஜாமீன்தாரர்கள் (ஒருவேளை இருந்தால்) இந்த அறிவிப்பு வெளியான நாளிலிருந்து 60 நாட்களுக்குள் நிலுவையைத் திருப்பிச் செலுத்தாமல் அறிவுறுத்தப்படுகிறார்கள், தவறினால், கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002-இன்படி மேற்கொண்டு நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

நாள்: 29.01.2025
இடம்: சென்னை

உண்மையுள்ள, அதிகாரப்பூர்வ கையொப்பதாரர்
ICICI வங்கி லிட்., சார்பில்

கனரா வங்கி Canara Bank

A Government of India Undertaking

சிண்டிகேட் Syndicate

சொத்து மீட்பு மேலாண்மைக் கிளை
எண்.524, 6வது தளம், கனரா வங்கி வட்ட அலுவலகக் கட்டடம்
அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
போன் : 044 2849 6900. e-mail id : cb2361@canarabank.com
Website : www.canarabank.com

கோரிக்கை அறிவிப்பு (பிரிவு 13(2))
கடன்தாரர் / ஜாமீன்தாரர் / அடமானதாரர்

Ref: ARM RAJKUMAR SARFAESI DN 25 Date: 21.01.2025

பெறுநர் :
ராஜ்குமார் M, எண்.18/32-B, செல்வ விநாயகர் கோவில் வீதி, பாலகிருஷ்ணா நகர், திருவொற்றியூர், சென்னை – 600 019.
ராஜ்குமார் M, ஃப்ளாட் எண்.1A, முதல் தளம், கதவு எண்.1, டெம்பிள் பெல்ஸ் அபார்ட்மெண்ட்ஸ், அய்யப்பா நகர், அய்யப்பா சாலை, திருவேற்காடு, சென்னை – 600077.

ஐயா / அம்மையீர்,
பொருள் : 2002–ம் வருடத்திய கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல், நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்து மீதான உரிமை அமலாக்கச்சட்டம் பிரிவு 13(2)–ன் கீழ் அனுப்பப்பட்ட கோரிக்கை அறிவிப்பு.

கடன்தாரரான **திரு. M. ராஜ்குமார்** (இனி 'கடன்தாரர்' என்று அறியப்படுவீர்கள்) ஆகிய தாங்கள் கீழே குறிப்பிட்டுள்ள அட்டவணை A-ல் உள்ள விவரப்படி எங்கள் வங்கியிலிருந்து கடன் வசதிகளைப் பெற்றிருக்கிறீர்கள்.

மேலும் **திரு. M. ராஜ்குமார்** அவர்கள் அட்டவணை B-ல் விபரமாக குறிப்பிட்டுள்ள கடனீட்டுச் சொத்துகளுக்கு எதிரான ஒப்பந்தத்தில் கேட்டுக் கொண்டுள்ளார்கள்.

கடன்தாரரால் பெறப்பட்டுள்ள கடன் வசதிகளின் விவரங்கள் :

கடன் எண்.	கடன் தன்மை/ வரம்பு	அனுமதி தேதி	தொகை
2782619000841	ஹவுசிங் லோன்	03.06.2021	ரூ.52,49,000/–

மேலே குறிப்பிடப்பட்டுள்ள கடன்கள் இந்த நோட்டீசின் கீழ் குறிப்பிட்டுள்ள சொத்தினை வங்கியிடம் அடமான முறையில், சொத்தின் பத்திரங்களைத் தந்து தாங்கள் கடன் பத்திரத்தை வங்கிக்கு எழுதிக் கொடுத்திருக்கிறீர்கள். கடன் வசதி பெற்றுள்ள மேலே குறிப்பிடப்பட்டுள்ள கடன்தாரர் ஆகிய நீங்கள் ஒப்புக் கொண்ட நிபந்தனைகளுக்கு ஏற்ப, தங்களது கடனைத் தீர்த்துக் கொடுக்கத் தவறி விட்டீர்கள். எனவே இந்தக் கடன் கணக்கை **16.03.2022** தேதியில் வங்கி 'செயலிழந்த கணக்குப் பிரிவில்' (NPA) சேர்த்துள்ளது. எனவே சட்டப் பிரிவு 13(2)ன் கீழ் இந்த அறிவிப்பு மூலம் உங்களது கடன் பாக்கி முழுமையும் **31.12.2024** அன்று வரை, **ரூ.69,58,282.26 (ரூபாய் அறுபத்து ஒன்பது லட்சத்து ஐம்பத்து எட்டாயிரத்து இருநூற்று எண்பத்து இரண்டு மற்றும் பைசா இருபத்து ஆறு மட்டும்)** மற்றும் பின் சேர்ந்துள்ள வட்டி, கட்டணங்கள், வங்கியால் ஏற்படக்கூடிய செலவுகள் மற்றும் இதர செலவுத் தொகைகள் உட்பட, இந்த அறிவிப்பு தேதியிலிருந்து அறுபது நாட்களுக்குள் செலுத்த வேண்டும் என்று தங்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது. அவ்வாறு செலுத்தத் தவறினால், வங்கியின் துணைப் பிரிவு (4) (d) மற்றும் (7) சட்டப் பிரிவு 13–ன் கீழ் தனக்குள்ள ஏதேனும் ஒரு அல்லது சகல உரிமைகளையும் பயன்படுத்த வேண்டி வரும் என்று அறியவும்.

மேலும் எங்களிடம் உங்கள் கடனுக்கு ஆதாரமாகத் தரப்பட்டுள்ள பத்திரங்களுக்கு உரிய, இதன் அடியில் குறிப்பிட்டுள்ள சொத்தினை, எந்த ஒரு வகையிலும் வங்கியின் முன் அனுமதி இன்றி அன்னியப்படுத்த முயற்சிக்கக் கூடாது என்றும் அறிவுறுத்தப்படுகிறது. எங்களுக்குள்ள எந்தவொரு உரிமைக்கும் தடையின்றி நடைமுறையில் உள்ள பிற சட்டங்களை ஒட்டியும் இந்த அறிவிப்பு அனுப்பப்படுகிறது.

பிணையம் வைக்கப்பட்டுள்ள சொத்துக்களை மீட்பதில் கிடைக்கும் கால அவகாசத்தைக் கருத்தில் கொள்ளுமாறு சட்டப்பிரிவு 13(8)ன் நிபந்தனைகளுக்கு கடன் வாங்கியவரின் கவனம் ஈர்க்கப்படுகிறது.

மேலே குறிப்பிட்டுள்ள கடன்தாரராகிய தங்களுக்கு வங்கியில் தாங்கள் கடைசியாக கொடுத்துள்ள முகவரிக்கு ஒப்புகையுடன் கூடிய பதிவு அஞ்சல் மூலம் அறிவிப்புகள் அனுப்பப்பட்டுள்ளது.

சட்டம் மற்றும்/அல்லது நடைமுறையில் உள்ள வேறு ஏதேனும் சட்டத்தின் கீழ் கடன்தாரர்களுக்குக் கிடைக்கும் வேறு எந்த உரிமைகளுக்கும் பாரபட்சம் இல்லாமல் இந்த அறிவிப்பு வழங்கப்படுகிறது.

17.03.2022 தேதியட்ட எமது முந்தைய கோரிக்கை அறிவிப்பு திரும்பப் பெறப்படுகிறது.

சொத்துக்களின் விவரங்கள் : சொத்தின் உரிமையாளர் : திரு. ராஜ்குமார் M. பகுதி–அ : திருவள்ளூர் மாவட்டம், தென்சென்னை பதிவு மாவட்டம், குன்றத்தூர் சார் பதிவு மாவட்டம், பூந்தமல்லி தாலூகா (முன்னாள் ஸ்ரீபெரும்புதூர் தாலூகா), திருவேற்காடு கிராமம், சர்வே எண்.203/15, 203/15A மற்றும் 203/15B, அய்யப்பா நகர் (அய்யப்பா மடம் சாலை), இதிலடங்கியதும் அதன் பகுதியுமான, 13076 சதுரடி நிலச் சொத்து. இதன் எல்லைகள் விபரம் : வடக்கே – திருமதி. தேவிஜெகநாதன், திருமதி. நாராயண கிரிஜா, திருமதி. முனியம்மாள், திரு. ரவி மற்றும் திரு. நடராஜனுக்குச் சொந்தமான சொத்து, தெற்கே – சர்வே எண்.203/7 ல் உள்ள அய்யப்சாமி கோவிலுக்குச் சொந்தமான நிலம், கிழக்கே – திரு. லாரன்ஸ் மற்றும் திரு. முத்துவிற்குச் சொந்தமான சொத்து, மேற்கே – அய்யப்பா நகர் தற்போது அய்யப்பா சாலை. **பகுதி – ஆ :** பகுதி–அ விலுள்ள சொத்திலுள்ள 13076 சதுரடியில் 644 சதுரடி பிரிபடாத பங்கு நிலம், அதனோடான 1367 சதுரடி (பொது ஏரியாவும் சேர்த்தது) ஃப்ளாட்– 'டெம்பிள் பெல்ஸ் அபார்ட்மெண்ட்ஸ்' என்கிற அபார்ட்மெண்ட்டின் முதல் தளத்திலுள்ள ஃப்ளாட் எண்.1A, கொண்ட குடியிருப்பு ஃப்ளாட், அனைத்துப் பொது உரிமைகள் மற்றும் பாதுகாக்கப்பட்ட கார் நிறுத்துமிடத்துடன்.

இடம் : சென்னை
தேதி : 21.01.2025

அங்கீகாரம் பெற்ற அதிகாரி
கனரா வங்கி

GIC ஹவுசிங் ஃபைனான்ஸ் லிட்.

பெருநிறுவன அலுவலகம் / தலைமை அலுவலகம்: GICHFL, நேஷனல் இன்சூரன்ஸ் கட்டடம், 6ஆவது தளம், 14, ஜாம்ஷெட்ஜி டாட்டா சாலை, சர்ச்கேட், மும்பை - 400020. தொ.பே.: 022-43041900. மின்னஞ்சல்: investors@gichf.com, corporate@gichf.com, இணையத்தளம்: www.gichfindia.com
தாம்பரம் கிளை அலுவலகம்: எண் 2c, சாலமன் தெரு, ஆதி நகர், கிழக்கு தாம்பரம், சென்னை-600059. அலுவலக தொ.பே.:044-40056991. தொடர்பு விவரங்கள்: 9087300997, கிளை மின்னஞ்சல் முகவரி: tambaram@gichfindia.com.
சென்னை கிளை அலுவலகம்: கிவ்ராஜ் வளாகம்-2, 2ஆவது தளம், எண் 480, அண்ணா சாலை, அரசுக் கலைக் கல்லூரி எதிரில், நந்தனம், சென்னை- 600035. அலுவலக தொ.பே.: 044-42034896/97 / 99. கிளை மின்னஞ்சல் முகவரி: chennai@gichfindia.com
அலுவலக தொ.பே.: 044-4203 4896/97/99, தொடர்பு விவரங்கள்: G. ராஜசேகர் - 9894601538
போரூர் கிளை அலுவலகம்: எண் 163/215, 1ஆவது தளம், மவுண்ட் பூந்தமல்லி நெடுஞ்சாலை, அய்யப்பன்தாங்கல், சென்னை-600056. அலுவலக தொ.பே.: 044-4957 1149, தொடர்பு விவரங்கள்: 9791113981, கிளை மின்னஞ்சல் முகவரி: porur@gichfindia.com

E-ஏல விற்பனை அறிவிப்பு

E-ஏல நாள்: 03.03.2025 / ஏலப்புள்ளிகளை சமர்ப்பிக்கக் கடைசி நாள்: 28.02.2025

கீழே கையொப்பமிட்டுள்ளவர் GIC ஹவுசிங் ஃபைனான்ஸ் லிட்., (GICHFL) நிறுவனத்தின் அதிகாரப்பூர்வ அலுவலராக இருக்கிறபடியால் கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002, பிரிவு 13(12)-இன் கீழும் அதனுடன் கடனீட்டுச் சொத்து (அமலாக்கம்) விதிகள் 2002, விதி 3-இன் கீழுள்ள உரிமைகளைப் பயன்படுத்தியும் கோரிக்கை அறிவிப்பினைப் பின்வரும் கடன்தாரர்களுக்கு / அடமானதாரர்களுக்கு அனுப்பி அவ்வறிவிப்பில் குறிப்பிட்டுள்ள நிலுவைத்தொகையைத் திருப்பிச் செலுத்துமாறு கோரியிருந்தார். எனினும் கடன்தாரர்கள் / அடமானதாரர்கள் குறிப்பிட்ட நிலுவைத் தொகையைத் திருப்பிச் செலுத்தத் தவறியதால், கீழே கையொப்பமிட்டுள்ளவர் மேற்கூறிய சட்டத்தின் பிரிவு 13(4) மற்றும் பிரிவு 14 அதனுடன் மேற்கூறிய விதிகளில் விதி 8-இன் கீழான உரிமைகளைப் பயன்படுத்திக் கீழ்க்காணும் சொத்துக்களை **நேரடி சுவாதீனம்** செய்துள்ளார்.

வ. எண்	கடன் கோப்பு எண் / கடன்தாரர் / கூட்டுக் கடன்தாரர் / ஜாமீன்தாரர் பெயர் / கிளை பெயர்	சொத்தின் முகவரி & சொத்தின் பரப்பு (கட்டுமானப் பரப்பு சதுர அடியில்)	கோரிக்கை அறிவிப்பு அனுப்பப்பட்ட நாள்	நேரடி சுவாதீன நாள்	31.12.2024 நாள்படி மொத்த நிலுவைத்தொகை (POS, வட்டி மற்றும் இதர கட்டணங்கள் உட்பட) (ரூபாயில்)	குறைந்தபட்ச விலை (ரூபாயில்)
1.	**TN0050610002651** **M சத்யநாராயணன்** (கடன்தாரர்) **M லலிதா** (கூட்டுக் கடன்தாரர்) / **சென்னை கிளை**	மனை எ